செய்தி வெளியீடு எண்.106 நாள்: 21.02.2023

**திருவள்ளூர் நகராட்சி, தனியார் திருமண மண்டபத்தில் இன்று (21.02.2023) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, ஐ.ஆர்.சி.டி.எஸ். தொண்டு நிறுவனம் மற்றும் சில்ட்ரன் பிலிவ் இணைந்து பெண்களை தலைமையாக கொண்ட குடும்பத் தலைவிகள் மற்றும் பெற்றோரை இழந்த குழந்தைகளின் பராமரிப்பாளர்களிடையே குழந்தை திருமணத்தை தடுப்பது குறித்து நடைபெற்ற விழிப்புணர்வு கருத்தரங்கத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்து, தலைமையுரையாற்றினார்**

திருவள்ளூர் நகராட்சி, தனியார் திருமண மண்டபத்தில் இன்று (21.02.2023) சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, ஐ.ஆர்.சி.டி.எஸ். தொண்டு நிறுவனம் மற்றும் சில்ட்ரன் பிலிவ் இணைந்து பெண்களை தலைமையாக கொண்ட குடும்பத் தலைவிகள் மற்றும் பெற்றோரை இழந்த குழந்தைகளின் பராமரிப்பாளர்களிடையே குழந்தை திருமணத்தை தடுப்பது குறித்து நடைபெற்ற விழிப்புணர்வு கருத்தரங்கத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ்,இ.ஆ.ப. அவர்கள் துவக்கி வைத்து, தலைமையுரையாற்றி, தெரிவித்ததாவது :

குழந்தை திருமணம் என்பது திருவள்ளூர் மாவட்டத்தை பொறுத்தவரைக்கும் முக்கியமான ஒரு பிரச்சனையாக இருக்கிறது. குறிப்பாக ஒரு சில தாலுக்காக்களான திருத்தணி, பள்ளிப்பட்டு, ஆர்.கே.பேட்டை, ஊத்துக்கோட்டை, கும்மிடிப்பூண்டி முதலான பகுதிகளில் அதிகளவில் குழந்தை திருமணம் செய்வதாக தகவல் வருவதை கண்டறிந்து அதனை தடுத்து மாவட்ட நிர்வாகம் சார்பாக பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று வருடங்களில் மட்டுமே சுமார் 136 குழந்தை திருமணங்கள் நடக்க விடாமல் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் கிடைக்கப்பெற்று உடனடியாக அக்குழந்தை திருமணம் தடுத்து நிறுத்தப்பட்டது. இந்த வருடம் மட்டுமே 2022-2023-ம் ஆண்டில் 23 குழந்தை திருமணங்கள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. 6 குழந்தை திருமண நிகழ்வுகள் நடந்து பின்னர் தகவல் வந்த அது குறித்து சட்டப்படி நடவடிக்கை எடுத்து, அதன்படி வழக்கு நடைபெற்று வருகிறது. இதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் மாவட்டத்தில் உள்ள பல்வேறு பள்ளிகளில் நேரடியாக மாவட்ட ஆட்சியர், சார் ஆட்சியர் முதலான அதிகாரிகளும், பல்வேறு தொண்டு நிறுவனங்களை சார்ந்த ஆலோசகர்களும், நிர்வாகிகள் அனைவரும் சேர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றோம்.

அதுமட்டுமின்றி, நம் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அரசு பள்ளிகளில் 9-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவியர்களும் அவரவர் பெற்றோர்களிடமிருந்து என்னுடைய பெண் குழந்தைகளுக்கு 18 வயதுக்கு முன்பே திருமணம் செய்ய மாட்டோம் என்று ஒரு போஸ்ட் கார்டில் உறுதி சான்று அளித்து மாவட்ட ஆட்சியரிடம் கடிதமாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏற்கனவே, அதற்காக மாவட்ட அளவில் ஒரு கண்காட்சி ஏற்படுத்தப்பட்டு தெரிவிக்கப்பட்டது ஒரு விஷயமாகும். இதே மாதிரி பல்வேறு முயற்சிகள் மாவட்ட நிர்வாகம் எடுத்து வந்தாலும், பல்வேறு துறைகளை உள்ளடக்கி அதாவது சமூக நலத்துறை, சுகாதாரத்துறை, வருவாய்த்துறை போன்ற பல்வேறு துறைகளை ஒருங்கிணைத்து அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காணும் வகையில் விரிவாக அணுகும்போது தான் குழந்தை திருமணங்கள் தடுக்க முடியும் என்று தெரிந்ததன் அடிப்படையில் தற்போது மாவட்ட நிர்வாகம் அதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. அதில் ஒரு பகுதியாக தான் இன்றைக்கு இந்த கருத்தரங்கம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

குழந்தை திருமணங்கள் நடைபெற்ற கடந்த மூன்று ஆண்டுகளில் மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு வந்து தடுத்து நிறுத்தப்பட்ட 136 குழந்தை திருமணங்கள் குறித்து சொல்லப்பட்டது. இது குறித்து ஆய்வு செய்யும்போது குறிப்பாக ஒரு பெற்றோர் மட்டும் இருக்கக் கூடிய குடும்பங்கள், விதவைகள், ஆதரவற்ற விதவைகள் இருக்கும் போது அவர்கள் வீடுகளில் உடனடியாக அந்த குழந்தைக்கு திருமணம் செய்து வைக்கும் சூழ்நிலை வருகிறது.

வருமானப் பிரச்சனை உள்ள குடும்பங்களின் சூழ்நிலையை கண்டறிந்தும், பெண்கள் தலைமையில் மட்டும் இருக்கும் குடும்பங்களை கண்டறிந்தும், அதற்காக கணக்கெடுக்கப்பட்டு, ஏற்கனவே குழந்தை திருமணங்கள் அதிகம் நடைபெறும் 50 கிராமங்களை கண்டறிந்து, அதில் 12 கிராமங்கள் திருத்தணி வட்டாரத்தைச் சேர்ந்ததும், 11 கிராமங்கள் பூண்டி வட்டாரத்தைச் சேர்ந்ததும், 4 கிராமங்கள் கும்மிடிப்பூண்டி வட்டாரத்தைச் சேர்ந்ததும், ஒரு கிராமம் எல்லாபுரம் வட்டாரத்தைச் சேர்ந்ததும், ஒரு கிராமம் கடம்பத்தூர் வட்டாரத்தைச் சேர்ந்ததும், 4 கிராமங்கள் திருவள்ளூர் வட்டாரத்தைச் சேர்ந்ததும், திருவாலாங்காடு வட்டாரத்தில் 7 கிராமங்களும், பள்ளிப்பட்டு வட்டாரத்தில் 2 கிராமங்கள் என மொத்தம் 50 கிராமங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த கிராமங்களில் எங்கு அதிகமாக பெண்கள் குடும்ப தலைவியாக மட்டும் இருக்கும் குடும்பங்கள் என கண்டறிந்து அவர்களிடம் நேரடியாக அணுகி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் மாவட்ட நிர்வாகம் சார்பாக எடுக்கப்பட்டு வருகிறது.

அதில் ஒரு படியாக, இந்த முதல் கருத்தரங்கம் ஏற்பாடு செய்திருக்கிறோம். இது போன்று பல்வேறு கூட்டங்கள் ஊராட்சி அளவில், ஒன்றிய அளவில், மாவட்ட அளவில், கோட்ட அளவில் ஏற்பாடு செய்யப்படவிருக்கிறோம். குறிப்பாக 18 வயதுக்குள் இருக்கும் ஒரு பெண் குழந்தைக்கு திருமணம் நடக்கும்போது உடலளவில், மனதளவில், உணர்வு ஆகியவை அடங்கிய பக்குவம் என்பது 18 வயதிற்கு பிறகு தான் வரும் என்று அரசு ஒரு சட்டமாக வைத்துள்ளார்கள். அதுமட்டுமின்றி கல்வி என்பது முக்கியம். சிறுவயதில் திருமணம் நடக்கும்போது கல்வி பயிலுவதற்கான வாய்ப்பு தடைபடுகிறது.

எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைகளின்படி, பெண் கல்விக்காக பல்வேறு திட்டங்கள் அரசு சார்பாக எடுக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக பட்டப்படிப்புக்காவும், உயர்படிப்புக்காகவும், உயர்கல்விக்காக "புதுமைப் பெண்" போன்ற முக்கியமான திட்டங்கள் அரசு சார்பாக எடுக்கப்பட்டு வருகிறது. பெண்கள் சரியான கல்வியை அடையும்போது தான் சமுதாயத்தில் ஒரு வளர்ச்சி ஏற்படும் என்பதற்காகத்தான் அரசு சார்பாக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சிறுவயதில் திருமணம் நடக்கும்போது தான் அந்த பெண் குழந்தையின் கல்வி தொடர முடியாமல் இருக்கிறது. அதுமட்டுமின்றி, உடலியல், மனதளவில், உணர்வுகள் இல்லாத போது பல்வேறு பிரச்சனைகளாக சிறுவயதில் கர்ப்பம் அடைவது, டீன்ஏஜ் கர்ப்பம் அதனால் அவர்களின் உயிருக்கும், கல்விக்கும், வாழ்க்கைக்கும் போன்ற அனைத்துக்கும் ஆபத்தாக இருப்பது இந்த குழந்தை திருமணம் தான். இதனை கருத்தில் கொண்டு மாவட்ட நிர்வாகம் சார்பாக இன்றைக்கு இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த குழந்தை திருமணத்திலிருந்து மீண்டு வந்தவர்கள், பஞ்சாயத்து வாரியாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஊராட்சிமன்ற தலைவர்கள், குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ள சட்டங்கள் குறித்து உயர் நீதிமன்றத்திலிருந்து வழக்கறிஞர்கள் விளக்கமாக தெரிவித்தனர். இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட ஐ.ஆர்.சி.டி.எஸ். தொண்டு நிறுவனத்திற்கும், மாவட்ட சமூக நலத்துறை மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு ஆகியவற்றிற்க்கும் மாவட்ட நிர்வாகம் சார்பாக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

அதனைத் தொடர்ந்து, இந்நிகழ்வில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, ஐ.ஆர்.சி.டி.எஸ். தொண்டு நிறுவனம் மற்றும் சில்ட்ரன் பிலிவ் சார்பாக குழந்தை திருமணத்தை தடுப்பது குறித்து பல்வேறு விளம்பரங்கள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக அரசு பள்ளி மாணவ - மாணவியர்களால் வரையப்பட்ட விழிப்புணர்வு ஓவியங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வெளியிட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தினார். மேலும், ஐ.ஆர்.சி.டி.எஸ். தொண்டு நிறுவனம் மற்றும் சில்ட்ரன் பிலிவ் சார்பாக ஏழை மாணவ - மாணவியர்களின் உயர்கல்விக்கு உதவுவதற்கு ஏதுவாக 30 மாணவ மாணவியர்களுக்கு தலா ரூ.10,000 வீதம் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டிலான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர். அவர்கள் வழங்கினார்.

தொடர்ந்து, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, ஐ.ஆர்.சி.டி.எஸ். தொண்டு நிறுவனம் மற்றும் சில்ட்ரன் பிலிவ் சார்பாக தயாரிக்கப்பட்ட கல்வி, பாலின சமத்துவம் மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வுகளில், சார் ஆட்சியர் (திருவள்ளூர்) (பொ) செல்வி.கேத்தரின் சரண்யா,இ.ஆ.ப. சில்ட்ரன் பிலிவ் நிறுவனத்தின் திட்ட மேலாளர் திருமதி.லாவண்யா கேசவராஜ், ஐ.ஆர்.சி.டி.எஸ். தொண்டு நிறுவன இயக்குனர் திரு.ஸ்டீபன், பல்வேறு தொண்டு நிறுவன பிரதிநிதிகள், பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**